# யா/வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்




## மீள் ஆரம்பிக்கப்பட்டு, 6வது பரிசளிப்பு விழா

## 20.10.2017



# யா/ வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா
## 1950 - 2017

## பாடசாலைக் கீதம்

வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் வாழ்க

வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் வாழ்க

வாகரராகியே வாழ்க வாகரராகியே வாழ்க

அறிவோடு அறம் பயில்க என்ற குறிக்கோளுடனே நாங்கள்

அறிவோடு அறம் பயில்க என்ற குறிக்கோளுடனே நாங்கள்

நெறி முறை காத்து நித்திலம் ஓங்க ஆடிப் பாடிக் கற்றுயர்வோம்

வாழ்க! வாழ்க! வாழ்க!

ஆசுகவி கல்லடி வேலனின் நாவலை அகத்தினில் தாங்கி

ஆசுகவி கல்லடி வேலனின் நாவலை அகத்தினில் தாங்கி

தேசம் புகழ்ந்திடும் வண்ணமாய் கற்றிட ஆரம்பக்கல்வி பெற இணைவோம்

தேசம் புகழ்ந்திடும் வண்ணமாய் கற்றிட ஆரம்பக்கல்வி பெற இணைவோம்

வளர்வோம் உயர்வோம் புகழ் பெறுவோம்

ஆரம்பக்கல்வி பெற இணைவோம்

ஆனந்தமாகவேகற்றிடுவோம்

ஆனந்தமாகவேகற்றிடுவோம்

## தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திட
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**வருடாந்த பரிசளிப்பு விழா**
**2017**
அழைப்பிதழ்
இடம்
யாஃஉரும்பிராய் இந்துக்கல்லூரி
பிரதான மண்டபம்
காலம்
2017.10.20 வெள்ளிக்கிழமை
நேரம்
பி.ப.1.00 மணி

**தலைவர்**
திரு.ஜே.யூட் மரியரட்ணம்
*வித்தியாலய முதல்வர்*

**பிரதம விருந்தினர்**
கௌரவ கல்வி அமைச்சர்
கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்
*கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை*
*மற்றும் இளைஞர் விவகார அமைச்சு - வடக்கு மாகாணம்*

**சிறப்பு விருந்தினர்கள்**
உயர்திரு. பா.கஜதீபன்
*வடக்கு மாகாண சபை உறுப்பினர்*

உயர்திரு.ச.சிவஸ்ரீ
*பிரதேச செயலாளர் - வலிவடக்கு*

உயர்திரு.நடராசா காண்டீபன்
*பிரதிக்கல்விப் பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி*
*வலிகாமம்*

**கௌரவ விருந்தினர்**
திரு.M.ஆனந்தகுமார்
*கோட்டக் கல்விப் பணிப்பாளர்,*
*தெல்லிப்பளை.*

செல்வி சுசீலா சாரங்கபாணி
*ஓய்வு நிலை ஆசிரியை*
*ஸ்தாபகர் கல்லடி வேலுப்பிள்ளையின் பேத்தியார்*

**நினைவுப்பேருரை**
பேராசிரியர் உயர்திரு.S.சிவலிங்கராஜா
*ஓய்வு நிலை பேராசிரியர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம*

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- கொடியேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- இறைவழிபாடு
- ஆசியுரை ***சிவஸ்ரீ திரு. கிருஸ்ணமூர்த்தி குருக்கள்***
- ஆசியுரை ***அருட்பணி மதுத்தீன் பக்திநாதர்***
  ***உரும்பிராய் உரோமன் கத்தோலிக்க பங்குத்தந்தை***
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை. ***தலைமையுரை, அதிபர் அறிக்கை***
  ***திரு. ஜே. யூட் மரியரட்ணம்***
  ***வித்தியாலய முதல்வர்***
- ஆங்கில அபிநயம்
- ஸ்தாபகர் நினைவுரை
- பரிசில் வழங்கல்
- சிங்கள அபிநயம்
- பரிசில் வழங்கல்
- சிறப்பு விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- கௌரவ விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- புலமைப் பரிசில் பரிசில் வழங்கல்
- நன்றியுரை – ஆசிரியர் திரு.க.கலாமோகன்
- பாடசாலைக்கீதம்

## மகுட வாக்கியம்

அறிவோடு அறம் பயில்க.

## பாடசாலை நோக்கு (VISSION)

தேசிய கல்வி கொள்கைக்கு அமைவாக மாற்றமுறும் உலகில் சவால்களை எதிர் கொள்ள வல்ல அறிவுஇ அறப்பண்பு கொண்ட மாணக்கர்களை உருவாக்கல்.

## பணிக்கூற்று (MISSION)

1. பாடசாலையின் ஒழுக்கக் கோவையைக் கடைப்பிடித்தல்.
2. அடிப்படை தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.
3. வளங்களைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வினைத்திறனுடன் பயன்படுத்தல்.
4. பாண்டியத்துடனான சிறந்த வினைத்திறனை பெற்றுக் கொடுத்தல்.

# பாடசாலை பற்றிய விபரம்

- **பாடசாலையின் பெயர் :** யா/வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்
- **நிரந்தர அமைவிட முகவரி :** வயாவிளான் அச்சுவேலி பிரதான வீதி வயாவிளான்
- **தற்காலிக முகவரி :** பலாலி வீதி உரும்பிராய்
- **பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு :** 1950
- **சொந்த இடத்தில் இருந்து இடம் பெயர்ந்தது :** 1990ம் ஆண்டு வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இணைந்திருந்த காலம் 01/01/2000 தொடக்கம் 31/12/2011 வரை
- **மீளவும் தனி நிர்வாக கட்டமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட திகதி :** 01/01/2012
- **பாடசாலை** ID NO : 1013043
- **தொகை மதிப்பீட்டு இல** : 009264
- **பாடசாலை வகை** : III
- **பரீட்சை இலக்கம்** : 11413
- **நிரந்தர கிராம சேவகர் பிரிவு :** J/252, பலாலி
- **தற்காலிக அமைவிட கிராம சேவகர் பிரிவு** : J/266, உரும்பிராய் கிழக்கு
- **பாடசாலை அமைந்த மாவட்டம் :** யாழ் மாவட்டம்
- **பாடசாலை அமைந்த மாகாணம் :** வட மாகாணம்
- **பிரதேச செயலாளர் பிரிவு :** நிரந்தரம் :- தெல்லிப்பளை<br>தற்காலிகம் :- கோப்பாய்
- **நிரந்தர தேர்தல் தொகுதி :** காங்கேசன்துறை



# ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை

பிறப்பு : 07 மார்ச் 1860


இறப்பு : 1944

வயாவிளான், யாழ்ப்பாணம்.




2015.11.16இல் வலிகாமம் கல்வி வலய சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக
எமது பாடசாலை தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்பட்ட கேடயம்

# அதிபர்




திரு ஜே.யூட்.மரியரட்ணம்

B.A (cey) Dip,in,Ed MEd.

## STAFF - 2017



## கல்வி சாரா ஊழியர்கள்



# பாடசாலை நிறுவுநர்
# ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் பகுதியில் உள்ள ஒரு சிற்றூரான "வயாவிளான் என்னும் ஊரில் கந்தப்பிள்ளை, வள்ளியம்மை இல்லறப்பயனாய் 1860ம் ஆண்டு வேலுப்பிள்ளை பிறந்தார்.

அவர் பிறந்த வீட்டினருகே ஒரு பெரிய கல்மலை இருந்தது. கல்மலைக்கு அருகே இருந்த வீட்டில் பிறந்தமையால் கல்லடி வேலுப்பிள்ளை என அழைக்கப்பட்டார். சிறுவயது முதலே அஞ்சா நெஞ்சுடையவராகவும், சிலேடையாகவும், நகைச்சுவையாகவும் பேசுவதில் வல்லவராகவும் திகழ்ந்த இவரைக் கற்பித்த ஆசிரியர்கள் வருங்காலத்தில் இவர் பெரும் புலவராவார் எனக் கூறி வியந்து நின்றனர்.

அகஸ்டீன் என்ற கிறிஸ்தவரிடம் தொடக்கக் கல்வியை பயின்று பின்னர் பெரும்புலவர் நமசிவாயம், வித்துவான் கதிர்காம ஐயர் ஆகிய சான்றோர்களிடமும் தமிழ்மொழியை முழுமையாகக் கற்றுப் புலமை பெற்றார். வடமொழி ஆர்வத்தால் அம்மொழியையும் பண்டிதர் ஒருவரிடம் கற்றுக் கொண்டார்.

நினைக்கின்ற நேரமல்லாம் அருவியாய்க் கவிதையைக் கொட்டும் ஆற்றலைத் தமது இளமைக் காலத்திலிருந்தே பெற்றிருந்தமையால் சமகாலப் புலவர்களால் "ஆசுகவி" எனப் போற்றப்பட்டார். பல்லாயிரக்கணக்கான பாடல்களை . பாடி வழங்கியிருப்பினும் அப் பெருமகனார் படைத்தளித்த கவிதை நூல்கள், பாக்கள் முதலியன அவரை சிறந்த உரைநடையாளர், இணையற்ற கண்டனக்காரர், சிறந்த சரித்திர ஆய்வாளர், உயர்ந்த சைவத்தொண்டர், இன வாதத்தை எள்ளளவும் விரும்பாதவர், மனிதரை ஒரே தெய்வமாக மதிப்பவர் என்றெலாம் சான்றுபகிர்கின்றன.

கவியாற்றலில் வல்லமை கொண்டிருந்த அப்பெருந்தகை உரைநடை எழுதுவதில் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே திறமும், உரமும் பெற்றுத் திகழ்ந்தவர். இவரது வரலாற்றை எழுதிய எழுத்தாளர் சிலோன் " விஜயேந்திரன்" உரைநடைச் செம்மல் என உளமார்ந்து பாராட்டியுள்ளார். ஈழத்தில் ஆறுமுக நாவலரின் காலத்தின்

பின்னர் அப்பெருமகனாரின் வழி நடந்து வசன நடைக்குச் செழுமையூட்டிச் செழிக்கச் செய்தார். குறை கண்டவிடத்து கண்டமை தெரிவிப்பதை குறிக்கோளாக கொண்டும் செயற்பட்டவராவார்.

தமிழின் மாட்சிமைக்கும், தமிழ்சமுதாயத்தின் மெய்மையான மேனிலைக்கும் களம் அமைத்து கொடுக்கும். சுதேச நாட்டியம் எனும் பத்திரிகையை 1902ம் ஆண்டில் தொடங்கி இலக்கியத் தாழ்வுகளையும், சமுதாய சீர்கேடுகளையும், சமயக் குறைபாடுகளையும் ஓங்கிய குரலால் உலகறியச் செய்ய அரும்பாடுபட்டார்.

தமிழ், சமயம், சமுதாயம் ஆகிய முத்துறைகளில் ஏற்பட்டு விடுகின்ற இரங்கத்தக்க குறைபாடுகளை சுட்டிக்காட்டவும், தட்டிக்கேட்கவும் "சுதேச நாட்டியம்" ஒரு நீதிமன்றமாக நின்று நிலவியது. ஏறத்தாழ இருபது வரலாற்று ஆய்வு நூல்கள் படைத்தளித்த தமது நூல்களில் கையாண்டுள்ள வசனநடை, தமிழின் உரைநடை செல்வத்தை ஒளி பெறச் செய்தது. அதுவும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாக என்பதனை நினைவிற் கொள்ள வேண்டும்.

தமிழ் மொழியும் தமிழ் மக்களும் மேன்மை பெற வேண்டும் என அளப்பரிய ஆர்வம் கொண்டு தனது வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றிய வேலுப்பிள்ளை .தமது எண்பத்து நான்காம் வயதில் 1944ம் ஆண்டு இறைவனின் திருவடி பேற்றைப் பெற்றார். ஆசுகவியாக வாழ்ந்த அப்பெருந்தனாக தமிழின் உரைநடைக்கு உரமூட்டிய அருமை அப்பெருமகனார் பெற்ற தனிப் பெருமை என அவரது வரலாற்றின் மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது.



# பாடசாலையின் வரலாற்றில் இருந்து

சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தின் பண்டாரவவளை தொகுதி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அமரர் கல்லடி வேலுப்பிள்ளையின் இரண்டாவது மகனும் சட்டத்தரணியுமாகிய அமரர் மு.வே. நடராஜா என்பவரால் அவரின் தந்தை ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையின் நினைவாக 1950ம் ஆண்டு வயாவிளான் சந்தியில் இருந்து அச்சுவேலி செல்லும் பிரதான வீதியில் வயாவிளான் சந்திக்கு அண்மையில் யா/ வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது.

எமது பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம், பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில், வாயவிளானை அண்டிய பகுதியில் விவசாயிகள், அரச உத்தியோகத்தரின் பிள்ளைகள் கல்வி பயின்று வந்தனர்.

1990ம் ஆண்டு யுலை மாதம் ஏற்பட்ட அசாதாரண நிலமையால் இடம்பெயர்ந்து, உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் ஒரு தனியார் வீட்டில் இயங்கி வந்தது. பின் 1996 இல் மீளவும் இடம்பெயர்ந்து இப்பாடசாலையின் ஆவணங்கள் கிளிநொச்சியில் பாதுகாக்கப்பட்டு மீளவும் உரும்பிராய்க்கு கொண்டு வரப்பட்டு இயங்கவைக்கப்பட்டது. 2000ம் ஆண்டு ஜனவரியில் வடக்கு கிழக்கு மாகாணண கல்வி அமைச்சின் செயலாளர் உத்தரவுப்படி யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டது.

2011ம் ஆண்டு இப்பகுதி பெற்றோரும், பழைய மாணவரும் இணைந்து பாடசாலை மீண்டுமம் திறக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். இவர்களுடன் அமரர் கல்லடி வேலுப்பிள்ளையின் உறவினர்கள், வயாவிளான் மக்கள் என பலரும் இணைந்து செயற்பட்டதன் விளைவாகவும் அமரர் கல்லடி வேலுப்பிள்ளையின் பேத்தியுமான செல்வி சுசீலா சாரங்கபாணி, பேராசிரியர் P.பாலசுந்தரம் பிள்ளை ஆகியோரின் கடின முயற்சியாலும் அப்போது அமைச்சர் கௌரவ K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நடவடிக்கைகளின் பயனாக இப்பாடசாலை உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு முன்னாள் உள்ள தனியார் காணியில் 2012 ஜனவரி 2 இல் தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்டது.

# 2017ம் ஆண்டு பரிசில் தின அதிபர் அறிக்கை


இன்னல்கள் எத்தனை கண்டாச்சு - நம் வாழ்வதனில்
இடம்பெயர்வுகள் 30 ஆண்டுகள் கடந்தது – நம் பாடசாலை
சொந்த மண்ணும் போச்சு கூடார வாழ்க்கையாச்சு
இத்தனை கண்டும் கல்வி அடைவில் - நம் தாய் புகழ் ஒளி

இன்றைய விழாவிற்கு ஆசியுரை வழங்குவதற்கு வந்திருக்கும் மதகுருமார்களே, இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்களே, மாகாணசபை உறுப்பினர் திரு.ப.கஜதீபன் அவர்களே, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.செ.சந்திரராஜா அவர்களே, தெல்லிப்பளை பிரதேச செயலாளர் அவர்களே, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.ந.காண்டீபன் அவர்களே, ஏனைய கல்வி அதிகாரிகளே, நினைவுப் பேருரை ஆற்ற வந்திருக்கும் பேராசிரியர் உயர்திரு. S.சிவலிங்கராஜா அவர்களே, தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.மா.ஆனந்தகுமார் அவர்களே, பாடசாலை ஸ்தாபகரின் பேத்தியார் மற்றும் உறவினர்களே, சகோதரப் பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, எமது பாடசாலையின் ஆசிரியர்களே, கல்வி சாரா ஊழியர்களே, என் அன்பிற்குரிய பெற்றோர்களே, பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, என் அன்பிற்குரிய மாணவர்களே உங்கள் அனைவருக்கும் இரு கரம் கூப்பி மனம் கனிந்த வணக்கத்தை தெரிவிப்பதோடு உங்கள் அனைவரையும் வருக வருக என்று வரவேற்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆசுகவி என இலங்கைத் தமிழர்களால் அன்போடு போற்றப்பட்ட அமரர் கல்லடி வேலுப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது மகனும் சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தின் பண்டாரவளைத் தொகுதியின் முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் K.V.நடராசா என்பவரால் 1950 களில் இப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. வயாவிளான் சந்தியில் இருந்து அச்சுவேலி செல்லும் பிரதான வீதியில் வயாவிளான் சந்திக்கு அண்மையில் வேலுப்பிள்ளை கவிபாடும் கல்லடி நிலப்பரப்பில்

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வந்தது. 1990 களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் அவ்விடத்தில் இருந்து இடம்பெயர்ந்து பாடசாலை யா/உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு முன்னால் உள்ள தனியார் காணி ஒன்றில் இயங்கி வருகின்றது. இப்பாடசாலையை ஆரம்பித்த K.V.நடராசா என்பவரையும் கல்லடி வேலுப்பிள்ளை என்பவரையும் இந்நேரத்தில் நினைவு கூறுகிறோம்.

2000ம் ஆண்டு ஜனவரி முதல் யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்ட இப்பாடசாலையை மீளவும் தனிநிர்வாகத்தில் கொண்டுவர வேண்டும் என பாடசாலையின் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் விடுத்த வேண்டுகோளை அடுத்து பாடசாலையின் ஸ்தாபகரின் பேத்தியார் செல்வி. சுசீலா சாரங்கபாணி அவர்களும் இப் பெற்றோர்களுடன் இணைந்து அப்போதைய அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான முன்னை நாள் அமைச்சர் கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து அவர் எடுத்த தீவிர நடவடிக்கையின் பயனாக இப்பாடசாலை இவ்விடத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டது. இன்று இப்பாடசாலை சுமார் 391 மாணவர்களோடு இயங்கும் மிகப் பெரிய ஆரம்பப் பாடசாலையாக திகழ்வதற்கு இவர்களின் நடவடிக்கையே காரணமாக அமைந்தது. இத்தகைய பாடசாலையின் வருடாந்த ஆண்டறிக்கையை உங்கள் முன்னிலையில் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



2017ம் ஆண்டில் மாணவர் தொகை

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் | இந்து | RC | NRC |
|---|---|---|---|---|---|---|
| 1 | 33 | 34 | 67 | 56 | 09 | 02 |
| 2 | 42 | 30 | 72 | 63 | 09 | - |
| 3 | 31 | 49 | 80 | 63 | 17 | - |
| 4 | 50 | 39 | 89 | 76 | 13 | - |
| 5 | 50 | 34 | 84 | 63 | 21 | - |
| மொத்தம் | 206 | 187 | 391 | 321 | 69 | 02 |

**கல்விச் சாதனை**

2017ம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைகக்கு 84 மாணவர்கள் தோற்றியுள்ளார்கள். இவர்களுள் 12 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை - 84**

- ❖வெட்டு புள்ளிகளுக்கு மேல் - 12 மாணவர்கள் - 14.28%
- ❖150 புள்ளிக்கு மேல் - 15 மாணவர்கள் - 17.85%
- ❖100 புள்ளிக்கு மேல் - 45 மாணவர்கள் - 53.57%
- ❖70 புள்ளிக்கு மேல் - 68 மாணவர்கள் - 80.95%
- ❖70 புள்ளிக்கு கீழ் - 16 மாணவர்கள் - 19.04%

இம் மாணவர்களுக்கு பொறுப்பாசிரியர்களாக இருந்து பல அர்ப்பணிப்புகளோடு மாலை நேர, விடுமுறை கால வகுப்புக்களை நடாத்தி இத்தகைய பேறுபேற்றிற்கு மாணவர்களை வழிகாட்டி நின்ற ஆசிரியர்களான திரு.க.கலாமோகன், திருமதி.சு.முரளி, திருமதி.க. சத்தியசீலன் ஆகிய மூன்று ஆசிரியர்களையும் பாடசாலையின் சமூகம் சார்பாக பொதுவாக பாராட்டி நிற்கிறேன். 70 புள்ளிகளுக்கு குறைவாக பெறலாம் என எதிர்பார்த்த மாணவர்களுக்கு விசேட கற்பித்தலை திட்டமிட்டு குழுக்குழுவாக மாணவர்களை பொறுப்பேற்று வழிநடாத்திய ஆசிரியர்களான திருமதி.வி.சோதியானந்தன், திருமதி.ச.சிவகுமார்,

செல்வி. சி.கௌரிமனோகரி, திருமதி.சர்மிளா திருக்குமாரன், செல்வி சி.தியானிசா ஆகியோரும் பரீட்சை விசேட செயற்றிட்டங்களில் மாணவர்களுக்கான பயிற்சியை இவர்கள் வழங்கி பெறுபேற்றிற்கு துணை நின்றார்கள். அவர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்து நிற்கிறேன்.

**அடைவு மட்டத்தை உயர்த்தல்**

தரம் 1,2,3,4,5 ஆகிய வகுப்புக்களில் சகல மாணவர்களின் அடைவு மட்டங்களையும் உயர்த்துவதற்காக ஒவ்வொரு வகுப்புக்களின் பிரிவுகளின் ஆசிரியர்களும் தனித்தனியாக விசேட செயற்பாடுகளை மேற்கொள்ளுகின்றனர். மாணவர்களின் தரத்திற்கு ஏற்ற தேர்ச்சி மட்டங்களை முழுமையாக மாணவர்கள் அடைந்து விட வேண்டும் என்பதற்காக விசேட வகுப்புக்களை நடாத்தி வருகின்றனர். மேலும் தவணைப் பரீட்சைகளுக்கு மேலதிகமாக மாதாந்தப் பரீட்சைகளை நடாத்தி அவற்றின் புள்ளிகளையும், விடைத்தாள்களையும் பெற்றோர் பாடசாலை முடிவடைந்த பின்னர் வருகைதந்து ஆசிரியர்களோடு அவற்றை பரிசீலனை செய்கின்றனர். இது இப்பகுதியில் உள்ள எந்த ஒரு பாடசாலையிலும் நடைபெறாத ஒரு செயற்பாடாக அமைகிறது. தவணைப் பரீட்சை புள்ளிகளை போன்று இப்புள்ளிகளும் பாடசாலையில் கோவைப்படுத்தப் பட்டுள்ளன. மேலும் **வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.செ.சந்திரராஜா அவர்களின் உத்தரவின் படி எழுத வாசிக்க தெரியாதவர்கள் என இனங்காணப்பட்ட சுமார் 35 மாணவர்களில் 18 மாணவர்களை தவிர ஏனையோரின் செயற்பாட்டில் யூலை,ஆகஸ்ட்,செப்டெம்பர் மாதங்களில் பாரிய முன்னேற்றத்தை காணக்கூடியதாக இருந்தது. இம்மாணவர்களுக்கான விசேட கற்பித்தலை தினமும் காலை 7.30 இலிருந்து 8.30 வரை ஆசிரியைகள் திருமதி.சர்மிளா திருக்குமரன், செல்வி சி.தியானுசா ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.** இவர்களுக்கும் எனது விசேட நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கிறேன். தற்போது தொடர்ந்தும் பின்னடைந்துள்ள 18 மாணவர்களினது திறனை வளம்படுத்த பெற்றோரின் முழுஅளவிலான ஒத்துழைப்பு எமக்கு அவசியமானதாகும்.

**புதிய மாணவர் அனுமதி**

2012ம் ஆண்டில் தரம் 1 இல் 53 மாணவர்களே இணைக்கப்பட்ட நிலையில் 2013ம் ஆண்டு தரம் 1 அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்ட தொகை 120 இற்கு அதிகமாக காணப்பட்டமையினால் தரம் 1 இல் மூன்றாவது பிரிவையும் ஆரம்பிப்பதற்கு வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் அனுமதி வழங்கியிருந்தார். முழு அளவில் இடம் பெயர்ந்த நிலையில் அடிப்படை வசதிகளே குறைந்த நிலையில் இயங்கி வரும் இப்பாடசாலையில் கூடிய மாணவர்களை அனுமதிப்பதால் ஏற்படக் கூடிய விளைவுகளை கருத்தில் கொண்டு 2017ம் ஆண்டில் தரம் 1 இல் இரண்டு பிரிவிற்காக சுமார் 68 மாணவர்கள் இணைக்கப்பட்டார்கள். தற்போது 2018ம் ஆண்டு தரம் 1 இற்கு அனுமதி கோரி சுமார் 104 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்று அவர்களில் சுமார் 64 மாணவர்களை தெரிவு செய்து வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதிக்காக சமர்ப்பித்துள்ளோம். இதனால் பெருமளவான விண்ணப்பங்களை நிராகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் நிரந்தரமான கட்டிடங்களில் இப்பாடசாலை இயங்குகின்ற போது மாணவர் தொகையை மேலும் அதிகரிக்கலாம் என ஆலோசிக்கின்றோம்.

**பாடசாலையின் பௌதீக வளம்**

ஏனைய பாடசாலைகளை போன்று கட்டிட வசதிகளோ, தளபாட வசதிகளோ எமக்கு இல்லை. "இடம்பெயர்ந்த பாடசாலை" என்ற அடைமொழியினால் நாம் புறக்கணிக்கப்படுகின்றோம். நிலையான கட்டிட வசதிகளை வழங்க சில நிறுவனங்கள் முன் வந்த போதிலும் நிரந்தர இடம் இல்லாததினால் அவர்கள் பின்வாங்கிச் செல்கிறார்கள்.

மாணவர்களின் தொகைக்கு ஏற்ப வகுப்பறைகளையும், மண்டபங்களையும், மலசல கூடங்களையும் அமைக்க முடியாத நிலை உள்ளது. இதனால் இப்பாடசாலை மாணவர்களுக்கு அடிப்படை வசதிகள் கூட கிடைப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தனியார் கல்வி நிறுவனங்களைப் போன்று எட்டு கூடாரங்களில் வகுப்பறைகள் முறைப்படி பிரிக்கப்படாது திறந்த வகுப்புகளில் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆசிரியர்களின் கற்பித்தல் உபகரணங்களை பாதுகாப்பதிலும், மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தவதும் சிரமமாக உள்ளது. இதனால் மாணவர்கள் பார்வை

மூலம் பெறும் அறிவு குறைவடைகின்றது. இது மாணவர்களின் கல்வி செயற்பாட்டிற்கு இடையூறாக உள்ளது. இவ் வகுப்பறைகள் மூடிய வகுப்பறைகளாக மாற்றப்படுமாயின் மாணவர்களின் கற்றலை மேம்படுத்த முடியும். ஒவ்வொரு வகுப்புக்களும் மூன்று பிரிவுகளை கொண்டது. மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிற்குரிய உபகரணங்களை பாதுகாத்து வைப்பதற்குரிய அலுமாரி பல வகுப்புக்களில் இல்லாதுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஆசிரியர்களும் சில அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். ஒவ்வொரு வகுப்பறைகளிலும் ஆசிரியர்களுக்குரிய கதிரை, மேசைகள் இல்லாததினால் மாணவர்களின் கதிரை மேசைகளையே ஆசிரியர் பயன்படுத்துகின்றார்கள். இதனால் ஆசிரியர்கள் மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகள், வினாத்தாள்கள் திருத்துவதில் பல சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

மாணவர்களுக்குத் தேவையான உடலியக்கச் செயற்பாட்டை வழங்க போதியளவு மைதானம் இல்லை. இதனால் பாடசாலைக்கு எதிராக உள்ள தனியார் காணியில் பல சிரமத்தின் மத்தியில் மாணவர்களை அழைத்துச் சென்றாலும் இச்செயற்பாட்டிற்குரிய இசைக்கருவிகளை பயன்படுத்த மின்சார வசதி அக்காணியில் இல்லாமையினால் முழுமையான பயிற்சியை இம்மாணவர்களுக்கு வழங்க முடியவில்லை. தரம் 1,2 மாணவர்களுக்கான உடலியக்கச் செயற்பாடுகள் பாடசாலை வளாகத்தில் தினமும் இடம்பெற்றாலும் இரு வகுப்புகளை ஒன்றாக இணைத்து சிறப்பாக செயற்படுத்தக் கூடிய வசதிகள் இல்லை. இது மாணவர்களின் சுறுசுறுப்பான செயற்பாட்டிற்கும் இடையூறாக உள்ளது.

### ஆசிரியர் ஆளணி விபரம்

கல்வித் அமைச்சின் காடரின் படி எமது பாடசாலைக்கு 17 ஆசிரியர்களும், ஒரு அதிபரும் இருக்க வேண்டும். தற்போது 16 ஆசிரியர்களும், ஒரு அதிபரும் உள்ளனர். ஒரு ஆசிரியர் பற்றாக்குறை இருந்தாலும் இது எமது பாடசாலையை பாதிக்கக் கூடிய விடயம் அல்ல என்பதனால் பாடசாலையில் இருக்கும் ஆசிரியர் குழாமோடு சிறப்பாக நிர்வகிக்க முடிகின்றது.

## ஆசிரியர் விபரம

| இல | பெயர் | கல்வித்தகமைகள் | வகுப்பும் தரமும் |
|---|---|---|---|
| 1. | திரு.ஜே.யூட் மரியரட்ணம் (அதிபர்) | B.A, MEd | 1 |
| 2. | திருமதி.அ.சிவகணநாதன் | B.A | 3 - I |
| 3. | திருமதி.ச.திருக்குமரன் | GCE A/L | 2 - II |
| 4. | திருமதி.வ.பாவனந்தசர்மா | B.A | 2 - II |
| 5. | திருமதி.ஜெ.ரகிஸ்வரன் | GCE A/L | 3 - I |
| 6. | திருமதி.சு.சுரேஸ் | GCE A/L | 2 - II |
| 7. | செல்வி.சி.கௌரிமனோகரி | B.Com | 2 - II |
| 8. | திரு.ந.ஆனந்தராசா | GCE A/L | 3 - II |
| 9. | திருமதி.ச.சிவகுமாரன் | GCE A/L | 2 - II |
| 10. | திருமதி.வி.சோதியானந்தன் | GCE A/L | 1 |
| 11. | திருமதி.ஜெ.ஜெயகுமார் | B.Com | 1 |
| 12. | திருமதி.மா.பாலகுமார் | B.A | 2 - II |
| 13. | திரு.ப.சிவகுமார் | GCE A/L | 2 - I |
| 14. | திருமதி.க.சத்தியசீலன் | GCE A/L | 2 - I |
| 15. | திரு.க.கலாமோகன் | B.A | 2 - I |
| 16. | திருமதி.சு.முரளி | GCE A/L | 2 - II |
| 17. | திருமதி.ஜெ.பாலகிருஸ்ணராஜா | GCE A/L | 3 - I |

**தொண்டராசிரியர் விபரம்**

1. திருமதி. பி.மணிவண்ணன்
2. செல்வி. சி.தியானுஷா

தொண்டர் ஆசிரியர்கள் இருவரும் இப்பாடசாலை தனித்து இயங்குவதற்கு முன்னர் யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி, இப்பாடசாலை தனித்து இயங்க ஆரம்பித்ததும் இப்பாடசாலையோடு இணைந்து இன்று வரை கடமையாற்றி வருகின்றனர். 2012, 2013, 2014 போன்ற ஆண்டுகளில் இருந்த ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்த இவ் ஆசிரியர்களின் சேவையை பாராட்டுவதோடு மிக விரைவில் நிரந்தர ஆசிரியர்களாக மாற பிரார்த்தித்து நிற்கின்றேன்.

**கல்வி சாரா ஊழியர் விபரம்**

1.திரு.கை.தனஞ்செயன் - சிற்றூழியர் தரம்

2.திரு.பி.கிருஸ்ணகுமார் - பகுதி நேர கணனி வடிவமைப்பாளர்

பாடசாலை ஆசிரியர் குழாமோடு பாடசாலை சிற்றூழியர்களும் மிகச் சிறப்பான முறையில் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு தேவையான ஏனைய உதவிகளை வழங்குகின்றமை சிறப்பம்சமாகும். இவர்களின் சேவையை பாராட்டுகின்றேன்.

மேலும் மாணவர்களுக்கான மதிய உணவை தயாரிப்பதற்கு வருகை தரும் பெற்றோர்கள் மூவரையும் பாராட்டுவதோடு அவர்களின் சேவை தொடர்ந்தும் இம்மாணவர்களுக்கு கிடைத்திட வேண்டுமென விரும்புகின்றேன்.

**பகுதித் தலைவர்**

1.திருமதி.வி.சோதியானந்தன்

2.திரு.ப.சிவகுமார்

ஆகிய இருவரும் பாடசாலையின் பகுதித் தலைவர்களாகவும் உப அதிபர்களாகவும் கடமையாற்றுகின்றனர். தமக்கென ஒதுக்கப்பட்ட கடமைகளை செய்வதோடு ஆசிரியை திருமதி.வி.சோதியானந்தன் உள்ளக மேற்பார்வையையும் செய்து வருகிறார். இவர்கள் இருவரும் தமது கற்பித்தல் பணிக்கு மேலாகவே இப்பணிகளையும் ஆற்றுகின்றமை பாராட்டத்தக்க அம்சமாகும்.

**2017 ம் ஆண்டு இப்பாடசாலையில் இடம்பெற்ற விழாக்கள்**

- 11.01.2017 கால்கோள் விழா
- 16.01.2017 பொங்கல் விழா
- 09.02.2017 இல்ல விளையாட்டுப் போட்டி
- 30.09.2017 நவராத்திரி விழா
- 02.10.2017 உலக சிறுவர் தினம்
- 06.10.2017 ஆசிரியர் தின விழா
- 20.10.2017 பரிசளிப்பு விழா

**நடைபெறவுள்ள விழாக்கள்**

- 06.12.2017 ஒளி விழா

**பாடசாலையின் தேவைகள்**

**கட்டிடத் தேவை**

சொந்தக் காணி விடுவிக்கப்படாமையினாலும் சொந்தமாக காணி இல்லாமையினாலும் நிரந்தர கட்டிடங்கள் எமக்கு இல்லை சுமார் 15 வகுப்பறைகளை கொண்ட கட்டிட அமைப்பு எமக்கு தேவை்யாக உள்ளது. இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பாடசாலையின் சொந்தக் காணியில் தற்போது கட்டிடங்கள் அமைக்கப்படுமாயின் காணி விடுவிக்கப்பட்டதும் பாடசாலையை அங்கு நடாத்துவது சிறப்பாக அமையும்.

**பௌதீக வளத் தேவைகள்**

கௌரவ அமைச்சர் அவர்களே, மாகாண சபை உறுப்பினர் அவர்களே

சொந்தக் காணியோ, சொந்தமாக காணியோ, நிரந்தரக் கட்டிடமோ இல்லாத எமக்கு 15 வகுப்பறைகளிலும் மாணவர்களின் ஆக்கங்களினையும் ஆவணங்களையும் பாதுகாக்க சுமார் 08 உருக்கு இரும்பு அலுமாரிகளை பெற்றுத்தருமாறு கோருகின்றேன்.

ஆசிரியர்களுக்கான கதிரைகள் 10, மேசைகள் 10, அதிபர் அறைக்கான மேசை, கதிரைகள், உருக்கு அலுமாரிகள் என்பன தேவையாக உள்ளது.

தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவர்கள் தரம் 4 இல் பயன்படுத்துகின்ற மேசை, கதிரைகளை பயன்படுத்துகின்றனர். இது அவர்களின் உடல் வளர்ச்சிக்கும், உள வளர்ச்சிக்கும் சிறப்பானது அல்ல. ஆகவே அவர்களுக்குரிய மேசை, கதிரைகளும்

அவசியமாகின்றது.

இதுவரை காலமும் வெளிநாட்டு பழைய மாணவர் ஒருவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட போட்டோ பிரதி செய்யும் இயந்திரம் பழுதடைந்தமையினால் அதனை திருத்துவதற்காக பெருமளவான நிதி தேவைப்படுவதால் திருத்த முடியாத நிலையில் உள்ளோம். அதனை திருத்த அல்லது புதிய போட்டோ பிரதி இயந்திரத்தை கொள்வனவு செய்ய ஆவண செய்யமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் நூல்நிலையத்தில் உள்ள புத்தகங்களை பாதுகாப்பதற்கு அலுமாரிகளும், நூல்நிலையத்திற்குரிய மேசை கதிரைகளும் எமக்கு அவசியமாக உள்ளது. இவற்றை முழு அளவில் பெற்றுத்தருமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திக் குழு**

23.01.2017ம் திகதி பி.ப.1.00 மணியளவில் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் தெரிவுக் கூட்டம் அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் 2016ம் ஆண்டு இருந்த அதே உறுப்பினர்கள் இவ்வாண்டும் இருந்து செயற்பட வேண்டும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. இதனை திருமதிக.தயாளினி மும்மொழிய திருமதி.செ.துளசி வழிமொழிந்தார். இக்குழுவின் செயலாளராக திருமதி.அ.சந்திரலேகாவும், பொருளாளராக ஆசிரியர் திரு.பா.சிவகுமார் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

இக் குழுவின் உறுப்பினர்கள் திருமதி.சி.சிவானந்தினி, திருமதி. பா.சிவசுயனி, திரு.து.ரகு. திரு:பே.ரமணதாஸன், திருமதி. தோ.அருள்ராகினி, திருமதி.ஜெ.காருண்யா, திருமதி.ந.ஜெயராணி ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

**சுகாதாரக் குழு**

இக்குழுவின் அங்கத்தவர்களாக திருமதி. க.சத்தியசீலன், திருமதி. ச.சிவகுமார், திரு.க.கலாமோகன், திரு.ம.ஆனந்தராஜா, திருமதி.மா.பாலகுமார், திருமதி.சு.சுரேஸ் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். இதில் தரம் 4, தரம் 5 மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**முகாமைத்துவக் குழு**

தலைவர் - (அதிபர்) திரு.ஜே.யூட் மரியரண்டனம்
உறுப்பினர்கள் - திரு.ப.சிவகுமார், திரு.க.கலாமோகன்,
திருமதி.வி.சோதியானந்தன்,
திருமதி.ஜெ.ஜெயக்குமார்(ஆசிரியர்கள்)

**ஒழுக்காற்றுக் குழு**

இக்குழுவில் அதிபர் உட்பட திரு.ப.சிவகுமார், திரு.க.கலாமோகன், திருமதி.ஜெ.ஜெயக்குமார் ஆகிய ஆசிரியர்கள் அங்கம் வகித்து வருகின்றனர்.

**இந்து மன்றம்**

இம் மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திருமதி. வ.பாவனந்தசர்மா, திரு. ப.சிவகுமார், திருமதி.ம. பிரியதர்சினி, செல்வி. சி.தியானிசா ஆகியோர் அங்கம் வகித்து வருகின்றனர்.

**கிறிஸ்தவ மன்றம்**

இம் மன்றத்தின் அங்கத்தவர்களாக திருமதி.ஜெ.ரதிஸ்வரன், திருமதி.மா.பாலகுமார், செல்வி.கௌரிமனோகரி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

**தமிழ் மன்றம்**

இதன் அங்கத்தவர்களாக திருமதி.க.சத்தியசீலன், திருமதி.சு.முரளி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

**ஆங்கில மன்றம்**

ஆங்கில மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி.ஜெ.பால கிருஸ்ணராஜா, திருமதி.ஜெ.ஜெயக்குமார் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

**நூலகம்**

இதற்கு பொருப்பாசிரியர்களாக திருமதி.ஜெ.ரதிஸ்வரன், திருமதி.மா.பாலகுமார் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

**இலவசப் பாடநூல்**

இதன் பொருப்பாசிரியராக திரு. க.கலாமேகன், திருமதி. ஜெ.ஜெயக்குமார் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

**அனர்த்த முகாமைத்துவக் குழு**

இக்குழுவிற்கு பொறுப்பாசிரியர்களாக திருமதி.அ.சிவகணநாதன், திரு.ப.சிவகுமார், திருமதி. ச.சிவகுமாரன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

**விளையாட்டத் துறை**

2017ம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டி சிறப்பாக நடைபெற்றது. இதன் பொறுப்பாசிரியர்களாக திரு.ப.சிவகுமார், செல்வி.சி.தியானிசா, திருமதி.வி.சோதியானந்தன், திருமதி.ம.பிரிய தர்சினி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**

இதன் தலைவராக திரு.ந.ஆனந்தராசா, பொருளாளராக திருமதி.ச.சிவகுமாரன், செயலாளராக திருமதி.ஜெ.ஜெயக்குமார் ஆகியோர் செயற்பட்டு வரகின்றனர்.

**பெற்றோர் கவனிக்க வேண்டியவை**

- பிள்ளைகளை தினமும் 7.20 இற்கு முன்னதாக பாடசாலைக்கு அனுப்பி வைக்கவேண்டும். தினமும் 40 – 60 இடைப்பட்ட மாணவர்கள் 7.30 இற்கு பின்னர் வருகின்றமை அவர்களின் பாதுகாப்பு கற்றலுக்கான ஆயத்தம் என்பவற்றில் பாதிக்கக் கூடியதாக உள்ளது. இந்நிலை மாற வேண்டும்.
- கற்றலில் பின்னடைந்த மாணவர்கள் என நாம் இனங்கண்டவர்களின் பெற்றோர் பாடசாலையில் ஆசிரியர்களை அடிக்கடி வருகை தந்து சந்திக்காமை மாணவர்களின் கல்வியை பாதிக்கின்றது.
- சுமார் 300 இற்கு மேற்பட்ட பெற்றோர்களின் பிள்ளைகள் படிக்கும் இப்பாடசாலைக்கு பொதுக் கூட்டங்களுக்கு சுமார் 25 – 50 வரையான பெற்றோர் தொடர்ச்சியாக அல்லது இடையிட்டு வருகை தராமை இருக்கின்றமை மாணவர்களின் கல்வியை பாதிக்க கூடியதாக உள்ளது.
- சுமார் 8% வீதமான பிள்ளைகள் தினமும் சுத்தமான ஆடைகளோடு பாடசாலைக்கு வருவதில்லை. இது அம்மாணவர்களுக்கு பாதிப்பானதாகும்.
- மாணவர்களின் கொப்பிகளை சுமார் 30 – 45 வீதமான பெற்றோர் தினமும் பார்வையிடுவதில்லை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இது ஆரம்பக் கல்விக்கு மிகவும் பாதிப்பானதாகும்.

- சுமார் 40 வீதமான பெற்றோர் காலையில் பிள்ளைகளுக்கு வீடுகளில் சமைத்த உணவை வழங்காது சிற்றுண்டிகளையும், பைக்கற் உணவுகளையும் மாணவர்களுக்கு வழங்குகின்றமை அவர்களின் கற்றல் திறனை பாதிப்பதாக அமைகின்றது. இந்நிலை மாறவேண்டும்.
- வகுப்பறைகளில் உள்ள சுமார் 25 வீதமான மாணவர்களின் பெற்றோர் காலையில் கால தாமதமாக எழும்புகின்றமை பிள்ளைகளை ஆயத்தமற்ற நிலையில் பாடசாலைக்கு அனுப்புகின்றமைக்கு காரணமாக அமைகின்றது. இந்நிலை மாற வேண்டும்.
- தாய் எனினும் தகப்பன் எனினும் அல்லது தாத்தா பாட்டி ஆயினும் அல்லது பாதுகாலர் ஆயினும் பாடசாலை வளாகத்துக்குள் வருகின்ற போது எமது காலாசாரத்திற்கு ஏற்ற சீருடைகளுடன் வருகின்றமை பெற்றோரின் அந்தஸ்தையும் மாண்பையும் உயர்த்தும். இது பெண் ஆசிரியர்களை அதிகமாக கொண்ட பாடசாலை ஆகும். இதனால் பெற்றோர்களின் அந்தஸ்த்துக்கு ஏற்ற ஆடை ஆசிரிய பெற்றோர் தொடர்பை சிறப்பானதாக்கும்.
- உங்கள் பிள்ளைகளை சமய கலாசார முறைகளோடு வளர்க்கின்றமை கல்வியில் உயர்ந்த பெறுபேற்றை பெற வழிவகுக்கும்.

## நன்றி கூறுகின்றேன்.

- இப்பாடசாலையின் பெற்றோர்கள் எமக்கு வழங்குகின்ற ஒத்துழைப்பிற்கு நான் நன்றி கூறுகின்றேன்.
- பெற்றோர் தாங்களாகவே முன்வந்து வகுப்பறைகளை சுத்தம் செய்கின்றமை, பாடசாலை வளாகத்தை சுத்தம் செய்கின்றமை போன்றவற்றிற்கு எனது மனமார்ந்த நன்றிகள்.
- கடந்த இல்ல விளையாட்டுப் போட்டிக்கும் இன்றைய பரிசளிப்பு விழாவிற்கும் பெற்றோர்களாகவே முன்வந்து ஏற்பாடுகளை செய்கின்றமை மிகவும் பாராட்டுக்குரியதாகும்.
- இவ்வாண்டு ஜனவரிக்கு முன்னர் (2016 டிசம்பர்) சகல வகுப்பறைகளையும் பெற்றோர்களாகவே இணைந்து வர்ணம் பூசி அழகு படுத்தியமை மிகவும் சிறப்பான ஒன்றாகும்.
- இன்றைய விழாவிலே மாணவர்களுக்கான பாண்ட் இசைக்கருவிகளை அன்பளிப்பாக வழங்கிய திரு.இரத்தினம் பாலதர்மர் (லண்டன்) என்பவருக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.
- வசதி குறைந்த மாணவர்களுள் சிலருக்கு கொப்பி, பேனா, கலர் பென்சில், இருவருக்கு சப்பாத்து போன்றவற்றை வழங்கிய வயாவிளான் பிரஜைகள் ஒன்றியத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.
- இவ்வாண்டு புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகளை அதிகரிக்க வைப்பதற்காக மாதம் தோறும் வருகை தந்து ஆசிரியர்களை நெறிப்படுத்திய ஆசிரிய ஆலோசகர்களுக்கும், அடிக்கடி வருகை தந்து என்னை பலவழிகளில் உற்சாகப்படுத்தி ஆலோசனைகளை வழங்கிய பிரதிக் கல்வி பணிப்பாளருக்கும், வலிகாமம் வலயக் கல்வி பணிப்பாளருக்கும் எனது விசேட நன்றிகளை பாடசாலைசார்பிலும் தனிப்பட்ட முறையிலும் தெரிவித்து நிற்கின்றேன்.
- இன்றைய விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த வடக்கு மாகாண கல்வி அமைச்சர் மற்றும் ஏனைய பிரமுகர்களுக்கும் பெற்றோர்களுக்கும், பாடசாலை நலன் விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

# 2017ம் ஆண்டில் பரிசில் பெறும் மாணவர்கள் விபரம்
## வகுப்பு ரீதியாக

### தரம் - 1A

இல மாணவர் பெயர்

1. த.சஞ்சீவன்
2. ச.டிஷானா
3. இ.எழிலினி
4. வ.சாத்வீகாஸ்ரீ
5. ச.மிதுசிகா
6. செ.மிதுசனா
7. சு.கன்சிகா
8. வரவொழுங்கு : ம.கபிநயா
9. பொதுத்தேர்ச்சி : ச.கம்சாயினி
10. இலவசப் பாடநூல் : க.மதுஸ்ரன்

### தரம் - 1B

11. சு.கஜீகரன்
12. வே.ஹர்சினி
13. ச.தனுஸ்கா
14. வரவொழுங்கு : பி.சயுந்தன்
15. பொதுத்தேர்ச்சி : ர.ஜஸ்மினி
16. இலவசப் பாடநூல் தி.தனஞ்சயன்

### தரம் - 2

17. ப.ஸ்ரீபவனுஜா
18. ந.குகஷாந்
19. ற.கௌதம்
20. நி.தர்ஷ்மிலா
21. க.கஜலக்ஷன்
22. ரா.சோபிஹறன்
23. ச.ஷர்ஜீனா
24. நி.ஹரிஸ்
25. வி.பகிஸ்ணா
26. ர.வகிர்சன்
27. சு.ஜீவிகா
28. **பொதுத்தேர்ச்சி:** சி.டணோசன்**2A**
29. " " " **:** ற.கிருஷ்சயன் **2B**
30. " " " : த.கஸ்மியா **2C**
31. **வரவு ஒழுங்கு** : பி.சாம்பவி **2A**
32. " " " : ச.பகின்சன் **2B**
33. " " " : ம.சாஹித்யா **2C**.
34. **இலவச பாடநூல்:**சி.ஜிவானிக்கா **2A**
35. " " " : ந.மிதுர்சனா **2B**
36. " " " : க.சந்தோஷ் **2C**

## தரம் - 3

37. நி.சாமந்தி
38. சு.எப்ரோன்
39. சு.கயானன்
40. றோ.சஸ்மிகா
41. சு.சாருஜா
42. அ.அபிசனா
43. எப்சிபா
44. வீ.கரிஸ்
45. அ.அனுஸ்கா
46. பா.விஸ்ஜேம்ஸ்ரா
47. **பொதுத்தேர்ச்சி**: கு.செரோன் **3A**
48. " " ": ம.அபினாஸ் **3B**
49. " " " : தி.சதுர்த்திகன் **3C**
50. **வரவு ஒழுங்கு** : ம.ஜஸ்மினா**3A**
51. " " " : ஸ்ரீ.மீகா **3B**
52. " " " : ஆ.நர்மதன் **3C**
53. **இலவச பாடநூல்** சு.ஜஸ்வினி**3A**
54. " " " : வ.ஜிதுசன் **3B**
55. " " " : இ.லுக்ஷியன் **3C**

## தரம் - 4

56. சி.தமிழிசை
57. க.பவதாரணி
58. ற.அஸ்வின்
59. செ.மதிவர்மன்
60. ஸ்ரீ.கம்சிகன்
61. ஜெ.சாகித்தியன்
62. சு.அனிஸ்ரன்
63. வி.சர்மிகா
64. த.திவ்வியா
65. கு.அம்றிக்கா
66. **பொதுத்தேர்ச்சி**: ஜெ.அக்ஷயா**4A**
67. " " " : உ.யஸ்மிதா **4B**
68. " " " : ச.நிகிதா **4C**
69. **வரவு ஒழுங்கு** : க.அஸ்வின் **4A**
70. " " " : ம.சகானா **4B**
71. " " " : கி.சிதுர்சினி **4C**
72. **இலவச பாடநூல்** தி.டொறஸ்ரீன் **4A**
73. " " " : சு.தபிசன் **4B**
74. " " " : ம.பர்நித் , நி.மனோஜ் **4C**

## புலமை பரிசில் பரீட்சை 70 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்.

120. வி.அபிராஜ்
121. யோ.டெனி
122. க.லயன்சன் **பொது தேர்ச்சி**
123. ஜெ.மிதூன்
124. ஜெ.நிதர்சன்
125. இ.நிதீசன்
126. த.சங்கீத்
127. ஜெ.செந்தானன்
128. பி.தாரகன்
129. சி.திலக்ஷன்
130. வ.துளசிராம்
131. தோ.டொவ்னி
132. ம.ஜீவிகா
133. சு.ஜிபின்சிகா
134. ந.கல்கி **பொது தேர்ச்சி**
135. அ.கபிநயா
136. கா.கர்ணிகா **இலவச பாடநூல்**
137. ம.கலைவாணி
138. ந.லக்ஷனா **வரவொழுங்கு**
139. ஸ.மதுசங்கவி
140. அ.நேத்திரா **வரவொழுங்கு**
141. ஜெ.வினுஷா
142. சு.சகிமா

## புலமை பரிசில் பரீட்சை 70 புள்ளிகளை அண்மித்த மாணவர்கள்.

143. தே.ஹரிசேகரன்
144. க.பவதாரன்
145. ற.றினெகசன்
146. பா.தரணிகன்
147. அ.வசிராஜ்
148. கு.லதுஷா
149. ர.பிரியா
150. கோ.றிஸ்மியா
151. ச.தரணிதரன்
152. ஜ.அரிஸ்ரயின்
153. பா.பவிஷன் **(ஒன்றிணைந்த பாடம்)**
154. ல.யதுஷன்
155. ஜீ.கபிசன்
156. ஜே.மதுவர்மன்
157. க.சுருதிகா
158. ச.அபிஷேகன்

## தரம் - 5 புலமை பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்

(ஒன்றிணைந்த பாடம்)

75. சு.மதுஷாயினி 179
76. செ.வினோஷ் 177
77. கி.றியாஸ்மன் 177
78. ம.பானுஜன் 175
79. சு.சாளிரான் 171
80. சி.திஷானி 166
81. அ.அகியூத் 164
82. க.இலக்கியா 163
83. ஆ.பிரமிகா 162
84. ம.அபிஷேக் 156
85. ந.பவிசனா 156
86. பி.மானசி 156

## புலமை பரிசில் பரீட்சை 100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்

87. ஜெ.அபிசேக்
88. க.அபிராஜ் (ஒன்றிணைந்த பாடம்)
89. க.அஜே
90. ஜொ.கிறிஸ்வின்
91. ஸ்ரீ.எசியோன்
92. ஸ்ரீ.எப்ரோன்
93. கி.கிஷான்
94. இ.கிஷாக் (வரவு ஒழுங்கு)
95. க.கனிஸ்ரன்
96. ஜெ.மிதுஸ்
97. ம.நிந்துஜன்
98. சி.நிதுசன்
99. ஜெ.நிரூபன்
100. ச.சுலக்ஷன்
101. சி.சிந்துஜன்
102. க.சஜீபன்
103. ஜெ.சஸ்வின்
104. வி.ரனிஸ்ரன் (ஒன்றிணைந்த பாடம்)
105. ஜெ.திசான்
106. கு.தேனகன்
107. ற.ரஜித்தன்
108. கு.ஆன்சிகா (பொதுத் தேர்ச்சி)
109. கே.டிசாந்தி
110. நி.குயிலினி
111. தே.கம்சிகா
112. ய.லதுமிஷா ஒன்றிணைந்த பாடம்
113. வா.மதுவந்தி
114. மு.பிரியங்கா
115. க.பிந்துயா
116. கா.பர்மிகா
117. ஜெ.சமிர்னா
118. க.சௌமியா
119. த.தர்மிகா

## 2012ம் ஆண்டு மீளத்திறக்கப்பட்டபின்
## யா/ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வுகள்

**2012.01.02**

தனி நிர்வாகத்தின் கீழ் செயற்பட அனுமதி கிடைத்தது. அங்குரார்ப்பண நிகழ்வு தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.S.கைலாசநாதன் கலந்து ஆரம்பித்து வைத்ததோடு ஸ்தாபகரின் பேத்தியார் சுசீலாசாரங்கபாணி, ஓய்வு பெற்ற அதிபர் கந்தையா ஆனந்தராசா, பாடசாலை மாணவர்களின் பெற்றோர், பழைய மாணவர்கள், யா/வயாவிளான் மத்திய கல்லூரியின் அப்போதைய அதிபர் திரு.கனகராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மீளத் திறக்கபட்ட இப்பாடசாலையின் நிர்வாகப் பொறுப்புக்கள் ஆசிரியை திருமதி.தவராநா ஞானாம்பிகை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

**2012.01.16**

மீளத்திறக்கப்பட்ட இப்பாடசாலையின் ஸ்தாபகர் நினைவு தினமும் அங்குராப்பண உத்தியோக பூர்வ நிகழ்வுகளும் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக அப்போதைய அமைச்சர் கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கலந்து கொண்டார். ஏனைய அதிதிகளளாக அப்போதைய வடக்கு மாகாண ஆளுநர் ஜனரல் G.A சந்திரஸ்ரீ அவர்களும், ஆளுநரின் செயலாளர் திரு.இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.S.சத்தியசீலன், தெல்லிப்பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.S.கைலாசநா்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

**2012.01.19**

இப்பாடசாலையின் தரம் 1 இற்கு மாணவர்களை இணைக்கும் முதலாவவது காள்கோல் விழா பொறுப்பாசிரியர் திருமதி.தவராநா ஞானாம்பிகை தலைமையில் நடைபெற்றது.

**2012.01.22**

இப்பாடசாலையின் புதிய அதிபராக திரு.ஜே.யூட் மரியரட்ணம் பொறுப்பேற்றார்.

**2012.03.10**

இப்பாடசாலையின் 2012ம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டி யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலத்தின் மைதாணத்தில் இடம்பெற்றது. பிரதம அதிதியாக யாழ் மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் கௌரவ சில்வேஸ்திரி அலஸ்ரீன் (உதயன்) அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

**2012.08.03**

இப்பாடசாலை 5000 பாடசாலை திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு அங்குரார்பண நிகழ்வு இடம்பெற்றது.

**2012.12.07**

இவ் ஆண்டுக்கான ஒளி விழா நடைடபெற்றது.

**2013.01.16**

இவ் ஆண்டுக்கான தரம் 1 இற்கு மாணவர்களை இணைக்கும் காள்கோல் விழா நிகழ்வு இடம்பெற்றது.

**2013.02.28**

இப்பாடசாலையின் 2013ம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டி யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலத்தின் மைதாணத்தில் இடம்பெற்றது. இப் போட்டிகளில் கலாச்சார நிகழ்வு ஒன்ற சேர்க்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

**2013.10.01**

சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு திரு.S.தேவமனோகரன், திருமதி ரூபாதேவி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

**2013.12.05**

இப்பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக திரு.சி.சத்தியசீலன் கலந்து சிறப்பித்தார்.

**2014.01.17**

இவ் ஆண்டுக்கான தரம் 1 இற்கு மாணவர்களை இணைக்கும் காள்கோல் விழா நிகழ்வு இடம்பெற்றது.

**2014.02.17**

இப்பாடசாலையின் 2014ம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டி யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலத்தின் மைதாணத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அப்போதைய அமைச்சர் கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கலந்து கொண்டார். ஏனைய அதிதிகளாக அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சில்வேஸ்திரி அலஸ்ரீன் (உதயன்) அவர்களும், வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.S.சந்திரராஜா அவர்களும், கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.சண்முககுலகுமாரன் அவர்களும், இலங்கை வங்கி முகாமையாளர் திரு.லவக்குமார் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

**2014.07.31**

இப்பாடசாலைக்கு முன்னைநாள் அதிபர் காலம் சென்ற அன்னம்மா பத்மநாதன் அவர்களின் பிள்ளைகளால் கணனி கையளிக்கப்பட்டது. இதில் பிரதம அதிதியாக அப்போதைய கணக்காளர் திருமதி.P.குகனேஸ்வவரி கலந்து சிறப்பித்தார்.

**2014.12.05**

இவ் ஆண்டுக்கான ஒளி விழா நடைடபெற்றது. இதில் பிரதம அதிதியாக அருட்பணி எட்மன் மைக்கல் அடிகளாரும், கௌரவ விருந்தினராக அருட்பணி A.யூட் நிக்ஷன் அடிகளாரும், வலயக் பிரதிக் கல்வி பணிப்பாளர் திரு.S.தேவமனோகரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

**2014.12.12**

இன்று கொழும்பு பல்கழைக்கழக முகாமைத்துவ பீட மாணவர்கள் (2013 - 2017) 19 பேர் இணைந்து பாடசாலையின் ப்யன்படுத்தப்படாது இருந்த அறை ஒன்றை வர்ணம் பூசி அழகுபடுத்தி

பாவித்த புத்தகங்கள் பாவித்த கணனி மற்றும் புதிய White board என்பனவற்றை வழங்கி பாடசாலையின் நூலகம் ஒன்றை ஏற்படுத்தி தந்தனர்.

**2015.01.22**

இவ் ஆண்டுக்கான தரம் 1 இற்கு மாணவர்களை இணைக்கும் காள்கோல் விழா நிகழ்வு இடம்பெற்றது.

**2015.02.16**

இப்பாடசாலையின் 2015ம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலைக்கு எதிராக உள்ள தனியார் காணியில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.S.ரூபாதேவி அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

**2015.10.01**

சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது.

**2015.10.06**

ஆசிரியர் தின நிகழ்வு இடம்பெற்றது.

**2015.10.13**

நவராத்திரி விழா நிகழ்வு இடம்பெற்றது.

**2015.11.16**

இன்று வலயக்கல்விப் பணிப்பாளர் தலமையில் யா/இராதநாதன் கல்லூரியில் இடம்பெற்ற சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் இப்பாடசலை மிகச்சிறந்த பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு அதற்கான கேடயத்தை அப்போதைய வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கௌரவ குருகுலராஜா அவர்கள் அதிபருக்கு வழங்கினார்.

**2015.12.03**

இப்பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக

மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வின் இரேனனியஸ் அவர்களும், சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.அ.ஈஸ்வரதாஸன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

**2016.01.14**

இவ் ஆண்டுக்கான தரம் 1 இற்கு மாணவர்களை இணைக்கும் காள்கோல் விழா நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.S.தேவமனோகரன் கலந்து சிறப்பித்தார். ஏனைய அதிதிகளாக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.கனகேஸ்வரன் கலந்து கழுத்துப்பட்டி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. சுன்னாகம் பங்குத் தந்தை அருட்பணி றெக்சி சுவுந்தரா அடிகளாரும் கலந்து கொண்டார்.

**2016.02.09**

இப்பாடசாலையின் 2015ம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலைக்கு எதிராக உள்ள தனியார் காணியில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.ர.ரவீந்திரன் கலந்து சிறப்பித்தார்.

**2016.10.06**

இப்பாடசாலையின் ஆசிரியர் தின விழா பெற்றோரால் சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் பிரதம அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.S.தேவமனோகரன் கலந்து சிறப்பித்தார்.

**2016.11.18**

இப்பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கௌரவ வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்கினேஸ்வரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

## விழாவில் ஆசிரியர்களின் பொறுப்புகளின் ஒதுக்கீடு

**01.பரிசில் கொள்வனவு**

- திரு.பத்மநாதன் சிவகுமார்
- திரு.கனகசிங்கம் கலாமோகன்
- திருமதி.சுரேஸ் சுமதி
- திருமதி.சோதியானந்தன் விக்னேஸ்வரி / திருமதி.பவானந்தசர்மா வனஜா
- திருமதி.ஜெயக்குமார் ஜெயராணி

**02.பொதியிடல்**

- திருமதி.சிவகுமாரன் சத்தியா
- திருமதி.சுரேஸ் சுமதி
- திருமதி.சத்தியசீலன் கமலவேணி
- திருமதி.பவானந்தசர்மா வனஜா
- திருமதி.பாலகுமார் மாரின் பிரசன்னா

**03.நிகழ்ச்சிகள்**

- செல்வி தியானிசா
- திருமதி ம.பிரியதர்சினி
- திருமதி.ஜெயக்குமார் ஜெயராணி
- திரு.கனகசிங்கம் கலாமோகன்

**04.நிறைகுடம்**

- திருமதி.முரளி சுபத்திரா

**05.வரவேற்புக் குழு**

- திருமதி.சோதியானந்தன் விக்னேஸ்வரி
- திருமதி.சிவகுமாரன் சத்தியா
- திரு.பத்மநாதன் சிவகுமார்
- திருமதி.பவானந்தசர்மா வனஜா

**06.உபசரனை**

- செல்வி.சிவபிரகாசம் கௌரிமனோகரி
- திருமதி.ரகிஸ்வரன் ஜெனோவா
- திருமதி.திருக்குமரன் சர்மிலா
- திருமதி.சுரேஸ் சுமதி
- திருமதி.பாலகிருஸ்ணராஜா ஜெயராணி

**07.மேடை / மண்டப அலங்காரம்**

- திருமதி.பாலகுமார் மாரின் பிரசன்னா
- திரு.கனகசிங்கம் கலாமோகன்
- திரு.பத்மநாதன் சிவகுமார்
- திரு.நடராசா ஆனந்தராசா
- திருமதி.சிவகணநாதன் அபரஞ்சி
- திருமதி.முரளி சுபத்தரா
- செல்வி தியானிசா

**08.மாணவர் ஒழுக்கம்**

- திரு.பத்மநாதன் சிவகுமார்
- திருமதி.சிவகுமாரன் சத்தியா
- திருமதி.சுரேஸ் சுமதி
- திருமதி.சத்தியசீலன் கமலவேணி
- திரு.கனகசிங்கம் கலாமோகன்
- திருமதி.சிவகணநாதன் அபரஞ்சி

**09.விருந்தினர் வரவேற்பு**

- திருமதி.சோதியானந்தன் விக்னேஸ்வரி
- திருமதி.பாலகுமார் மாரின் பிரசன்னா

**10.வெளிக் கொடிகள் நடுதல்**

- திரு.கனகசிங்கம் கலாமோகன்
- திரு.பத்மநாதன் சிவகுமார்
- திரு.நடராசா ஆனந்தராசா
- பி.கிருஸ்ணா
- கை.தனஞ்செயன்



2013.06.24 - பாடசாலை மாணவர்களுக்கு ஒரு கோப்பை பால் வழங்கும் நிகழ்வு ஆரம்ப நாள்




கால்கோள் விழா - 17.01.2014




பரிசளிப்பு விழா டிசம்பர் 2013



2014.02.17 பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினர்
முன்னாள் அமைச்சர். K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விளக்கேற்றி ஆரம்பிக்கின்றார்



2015.11.16இல் வலிகாமம் கல்வி வலய சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக எமது பாடசாலை தெரிவு செய்யப்பட்டு கேடயம் வழங்கப்பட்டபோது.



2015.11.16இல் வலிகாமம் கல்வி வலய சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக எமது பாடசாலை தெரிவு செய்யப்பட்டு கேடயம் வழங்கப்பட்டபோது.



2016 ஜனவரியில் பெற்றோரால் ஆசிரியர் மேசை வழங்கப்பட்ட போது



கண்காட்சி - 2016 தை



பாடசாலை ஸ்தாபகரின் பேத்தி செல்வி. சுசிலா சாரங்கபாணி அவர்கள்



முன்னைநாள் அதிபர் அமரர் அன்னம்மாள் அவர்களின் நினைவக பிள்ளைகளுக்கு கணனி வழங்கப்பட்டது.

## 2016ம் ஆண்டு பரிசளிப்பு நிகழ்வுகள்






2016ம் ஆண்டு பரிசளிப்பு நிகழ்வுகள்






2016ம் ஆண்டு பரிசளிப்பு நிகழ்வுகள்





## 2016ம் ஆண்டு பரிசளிப்பு நிகழ்வுகள்










மீள திறக்கப்பட்ட
யா / வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்தின்
6வது பரிசு வழங்கும் நிகழ்வுக்கு
எமது வாழ்த்துக்களையும்
பாராட்டுக்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்

வாழ்க!
யா / வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்
உயர்க அதன் பணி

கல்லடி வேலுப்பிள்ளையின் மூத்த மகன்
காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் மகள்
திருமதி யோகமணி சபாரட்ணம் (கொழும்பு)




ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.0212219129